DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of Judicial Magistrate Court, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 131/2019** |
| Deposition of Witness for | : PW2 |
| Name | : ரிபாய் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 25.06.2026. |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 25 June 2026.

**எதிரிகள் ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல்விசாரணை:**

நான் தற்போது சங்கரன்கோவில் வசித்து வருகிறேன். நான் செக்யூரிட்டியாக வேலை வருகிறேன். அ.சா.1 யை தெரியும். எதிரிகளை எனக்கு தெரியும். 22.06.2011–ல் காலை 6.00 மணிக்கு அ.சா.1 தொலைபேசி மூலம் என்னை தொடர்பு கொண்டு எதிரி முனியான்டிக்கு பணம் கொடுக்க வேண்டு நீ வா என்று என்னை கூப்பிட்டார். நான் முருகன் வீட்டிற்கு சென்றேன். அ.சா.1 ரூ.5 லட்சத்தி 50 ஆயிரத்தை 1–ம் எதிரி முனியான்டியிடம் என் முன்னிலையில் கொடுத்தார். அதற்கு முன்பு முருகன் அ.சா.1 எதிரி

முனியான்டிக்கு ஏற்கனவே 50 ஆகிரம் கொடுத்தார். என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.2–ல் ஆவணத்தில் உள்ள முதல் சாட்சி கையொப்பம் என்னுடையது தான். என்னுடைய **முதல்சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.3 ஆகும்**. வழக்கு சம்மந்தமகா போலிசார் என்னை விசாணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

நான் 6ம் வகுப்பு படித்துள்ளேன். அ.சா.1 என்னுடன் படிக்கவில்லை. அவர் எனக்கு பக்கத்து வீடு இல்லை. எனக்கும் அவருக்கும் தொழில் ரீதியான பழக்கம் இல்லை. ஒப்பந்த பத்திரத்தில் என்ன எழுதி இருக்கிறது என்று கேட்டால் 5 ½ லட்சம் கொடுத்தது மட்டும் தெரியும். 500 ரூபாய் கட்டை பார்த்தேன். எண்ணிப்பார்க்கவில்லை. நான் முதல் விசாரணை சொன்ன விவரத்தைத்தான் போலிஸ் விசாரணையிலும் சொன்னே். ஒப்பந்த பத்திரத்தை யார் எழுதினார் என்று சொன்னால் எனக்கு தெரியாது என்றால் சரிதான். என்னை சாட்சிசொல்ல அ.சா.1 முருகன் அழைத்து வந்தார் என்றால் எனக்கு அழைப்பாணை கிடைத்த அடிப்படையில் சாட்சியம் அளிக்கவந்துள்ளேன்.

இந்த ஒப்பந்தத்தில் சாட்சியாக முதலாவதாக நான்தான் கையெழுத்து போட்டேன் என்றால் சரிதான். மற்ற நபர்கள் எப்பொழுது கையெழுத்து போட்டார்கள் என்றால் சரிதான். நான் நீதிமன்றத்தில் சொன்ன தொகைக்கும் ஒப்பந்தத்தில் சொன்ன தொகைக்கும் வேறுபாடு உள்ளது என்றால் சரியல்ல. இந்த வழக்கைப்பற்றி எனக்கு எதுவும் நேரடியாக தெரியாது என்றாலும் என் நண்பர் சொல்லித்தான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரியல்ல. அ.சா.1 கொடுத்த பொய்யான புகாருக்காக அ.சா.1 எனது நண்பர் என்பதால் அவருக்கு அனுசரணையாக பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு அ.சா.1 தொழில் ரீதியாக பழக்கம் இல்லாத சூழ்நிலையிலும பக்கத்து வீட்டில் வசிக்காத சூழ்நிலையிலும் அ.சா.1 க்காக சாட்சியம் அளிக்க வந்துள்ளது அ.சா.1 யிடம் பணம் பலன் பெற்றுகொண்டு சாட்சியம் அளிக்க வந்துள்ளேன்

என்றால் சரியல்ல. ஒப்பந்த பத்திரத்தில் தரப்பினர்கள் யார் யார் என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

(Sd/-)M.Mari
Judicial Magistrate,
Sankarankovil.